Private
E-Sevai
Center
CSC Center
STAR RAINBOW
SERVICES
VADAPALANI
8144337349

# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com

தினசரி காலை நாளிதழ்

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனிக்கிழமை, ஜூன் 01, 2024 | இதழ் 49

# நாடாளுமன்ற இறுதிக்கட்ட தேர்தல் வாரணாசி உட்பட 57 தொகுதிகளில் இன்று விறுவிறுப்பான வாக்குப்பதிவு மேற்கு வங்கத்தில் வன்முறை

சென்னை, ஜூன் 01, 2024 : நாடாளுமன்றத்துக்கு இன்று இறுதிக்கட்டமாக 57 தொகுதிகளில் வாக்குப்பதிவு விறுவிறுப்புடன் நடைபெற்று வருகிறது. இதில் பிரதமர் மோடி உள்பட 904 வேட்பாளர்கள் களம் காண்கிறார்கள். மதியம் 1 மணி நிலவரப்படி 40.09% வாக்குப்பதிவு ஆகியுள்ளது.

நாட்டில் மொத்தமுள்ள 543 நாடாளுமன்ற தொகுதிகளுக்கு 7 கட்டங்களாக தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்தது.

அதன்படி முதல் கட்ட தேர்தல் கடந்த ஏப்ரல் 19ந்தேதி 102 தொகுதிகளுக்கு நடைபெற்றது. இதில் தமிழ்நாடு, புதுச்சேரியை சேர்ந்த 40 தொகுதிகளும் அடங்கும்.

இதையடுத்து ஏப்ரல் 26, மே 7, 13, 20 மற்றும் 25ந்தேதிகளில் தொடர்ச்சியாக மொத்தம் 6 கட்ட தேர்தல்கள் நடந்து முடிந்தன. மேற்குவங்காளம், ஆந்திர மாநிலங்களை தவிர மற்ற இடங்களில் அமைதியாக தேர்தல் நடந்து முடிந்தன.

இதுவரை 28 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 486 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவுகள் நிறைவடைந்துள்ளன.

இந்த நிலையில் 7-வது மற்றும் இறுதிக்கட்டமாக 8 மாநிலங்களை சேர்ந்த 57 தொகுதிகளில் இன்று வாக்குப்பதிவு நடைபெற்றது.

இதில் பஞ்சாபில் மொத்தமுள்ள 13 தொகுதிகளுக்கும், இமாசல பிரதேசத்தில் 4, உத்தர பிரதேசத்தில் 13, மேற்கு வங்கத்தில் 9, பிகாரில் 8, ஒடிசாவில் 6, ஜார்க்கண்டில் 3, சண்டீகர் யூனியன் பிரதேசத்தில் ஒரு தொகுதியில் இன்று காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு துவங்கியது. மாலை 6 மணிக்கு வாக்குப்பதிவு நிறைவடைகிறது.

ஒடிசாவில் நாடாளுமன்ற தேர்தலுடன் சட்டமன்ற தேர்தலும் நடந்து வருகிறது. இம்மாநிலத்தில் இறுதிக்கட்டமாக 42 சட்டமன்ற



தொகுதிகளில் இன்று வாக்குப்பதிவு நடந்தது.

மக்கள் காலையில் இருந்தே ஆர்வத்துடன் நீண்ட வரிசையில் நின்று தங்கள் வாக்கினை பதிவு செய்து வருகிறார்கள். விறுவிறுப்புடன் வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது.

பிரதமர் மோடி போட்டியிடும் வாரணாசி தொகுதியில் இன்று வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது.

மேலும் இமாசலபிரதேசம் மண்டியில் நடிகை கங்கனா ரணாவத், ஹமீர்பூரில் மத்திய அமைச்சர் அனுராக் தாக்கூர், பஞ்சாப்பின் பதிண்டா தொகுதியில் சிரோன்மணி அகாலிதளம் சார்பில் ஹர்சிம்ரத் கவுர் பாதல், உத்தரபிரதேசம் கோரக்பூரில் போஜ்பூரி நடிகர் ரவிகிஷன், பீகார் மாநிலம் பாடலிபுத்ராவில் லாலுபிரசாத் யாதவின் மூத்த மகள் மிசா பாரதி, மேற்குவங்காள மாநிலம் டைமண்ட் ஹார்பரில் மம்தா பானர்ஜியின் மருமகன் அபிஷேக் பானர்ஜி உள்பட 904 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இவர்களின் வெற்றி, தோல்வியை 10.06 கோடி வாக்காளர்கள் நிர்ணயிக்கிறார்கள். இவர்கள் வாக்களிக்க வசதியாக, 1.09 லட்சம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன.

பதற்றமான, மிகவும் பதற்றமான வாக்குச்சாவடிகளில் உள்ளூர் போலீசாருடன் துணை ராணுவத்தினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் அங்கு கண்காணிப்பு கேமராக்களும் பொருத்தப்பட்டு, வாக்குப்பதிவு கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதில் மேற்குவங்காளத்தில் 9 தொகுதிகளில் நடைபெறும் தேர்தலில் வரலாறு காணாத வகையில் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. அங்கு 960 கம்பெனி துணை ராணுவத்தினருடன், உள்ளூர் போலீசார் 33 ஆயிரம் பேரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இறுதிக்கட்ட தேர்தலில் காலை 11 மணி நிலவரப்படி 26.30 சதவிகித வாக்குகள் பதிவாகியுள்ளது. பீகார் - 24.25% இமாச்சலபிரதேசம் - 31.92% ஜார்க்கண்ட் - 29.55% ஒடிசா - 22.64% பஞ்சாப் - 23.91% உத்தரபிரதேசம் - 28.02% மேற்குவங்காளம் - 28.10% சண்டிகர் - 25.03% வாக்குப்பதிவாகியுள்ளது.

இமாச்சலபிரதேசம் பிலஸ்பூரில் உள்ள வாக்குச்சாவடியில் பா.ஜ.க. தேசிய தலைவர் ஜே.பி.நட்டா வாக்களித்தார். ஜே.பி.நட்டாவுடன் அவரது மனைவியும் வாக்களித்தார்.

உத்தரபிரதேச முதலமைச்சரும், பா.ஜ.க. மூத்த தலைவருமான யோகி ஆதித்ய நாத் கோரக்பூர் தொகுதி கோகர்நாத் பகுதியில் உள்ள வாக்குச்சாவடியில் வாக்களித்தார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், இது இந்தியாவின் ஜனநாயகத் திருவிழா. இன்று உத்தர பிரதேசத்தில் 13 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது. நாடு முழுவதும் எங்களுக்குக் கிடைக்கும் வரவேற்பைப் பார்க்கும் போது ஜூன் 4 எங்களுக்கு நம்பிக்கை அளிக்கும் நாளாக தெரிகிறது. அன்றைய தினம் மீண்டும் மோடி ஆட்சி அமையும் என்றார்.

இறுதிக்கட்ட வாக்குப்பதிவையடுத்து பிரதமர் மோடி இன்று வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

வாக்காளர்கள் பெருமளவு திரண்டு தேர்தல் வாக்களிப்பில் பங்கேற்க வேண்டும். பெண்கள், இளைஞர்கள் பெருமளவு திரண்டு ஜனநாயக கடமையாற்றுவார்கள் என நம்புகிறேன். வாக்களிப்பில் பங்குபெற்று நமது ஜனநாயகம் மேலும் துடிப்போடு செயல்படுவதை உறுதி செய்வோம் என தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரும், ஆம் ஆத்மி கட்சியின் மாநிலங்களவை எம்.பி.யுமான ஹர்பஜன் சிங் பஞ்சாப் மாநிலம் ஜலந்தரில் உள்ள வாக்குச்சாவடியில் வாக்களித்தார்.

இமாச்சல பிரதேசம், ஹமிர்பூரில் உள்ள வாக்குச்சாவடியில் அனுராக் தாக்கூர் மற்றும் அவரது தந்தையும், ஹிமாச்சலப் பிரதேச முன்னாள் முதல்வருமான பிரேம் குமார் துமாலும் வாக்களித்தார். பின்னர் நிருபர்கள் சந்திப்பில் அனுராக் தாக்கூர் கூறியதாவது மக்கள் உற்சாகம் அடைந்துள்ளனர். அனைவரும் நல்லாட்சி அமைய வாக்களிக்க வேண்டும். பா.ஜ.க. தொண்டர்கள் நிறைய வேலை செய்திருக்கிறார்கள். நாங்கள் மக்களின் ஆசீர்வாதத்தைப் பெறுவோம்.

உத்தரபிரதேச மாநிலம் காசிபூரின் மோகன்புரா கிராமத்தில் உள்ள வாக்குச்சாவடியில் ஜம்மு- காஷ்மீர் கவர்னர் மனோஜ் சின்ஹா வாக்களித்தார்.

ஏற்கனவே நடந்து முடிந்த 6 கட்டத் தேர்தல்களில் முறையே 66.14%, 66.71%, 65.68%, 69.16%, 62.2%, 63.36% வாக்குகள் பதிவாகியுள்ளன. இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் இறுதிக்கட்டத் தேர்தலுக்கு பின் ஜூன் 4-ம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன.

ஆந்திரம், அருணாசல பிரதேசம், சிக்கிம் ஆகிய மாநிலங்களில் நாடாளுமன்ற தேர்தலுடன் சட்டமன்ற தேர்தலும் நடைபெற்று முடிந்துள்ளது. ஒடிசாவில் இன்றுடன் சட்டமன்ற தேர்தல் நிறைவடையும். அருணாசல பிரதேசம், சிக்கிமில் சட்டமன்ற தேர்தல் வாக்கு எண்ணிக்கை ஜூன் 2-ம் தேதியும், இதர இரு மாநிலங்களில் ஜூன் 4-ம் தேதியும் நடைபெறவுள்ளன.

இன்று மாலையுடன் நாடாளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவு நிறைவடைவதை தொடர்ந்து, பல்வேறு ஊடகங்கள் சார்பில் கருத்துக் கணிப்பு முடிவுகள் வெளியிடப்படும். இதன்மூலம் தேர்தல் முடிவுகள் குறித்து ஓரளவுக்கு ஊகிக்க முடியும்.

மேற்கு வங்காள மாநிலத்தின் பல இடங்களில் வாக்குப்பதிவு தொடங்கியதுமே வன்முறை சம்பவங்கள் நடந்தன. தெற்கு 24 பர்கானாஸ் மாவட்டம், குல்தாய் பகுதியில் உள்ள வாக்குச்சாவடி எண் 40, 41-ல், இன்று காலை வாக்குப்பதிவு தொடங்கியதுமே வன்முறை ஏற்பட்டது. இந்த வன்முறையில் அங்கிருந்த வாக்குப்பதிவு யந்திரங்கள், விவிபாட் யந்திரங்கள் ஆகியவை தண்ணீரில் வீசப்பட்டன. ஆனால், இந்த யந்திரங்கள் பழுது ஏற்பட்டால் மாற்றுவதற்காக வைக்கப்பட்டிருந்த கூடுதல் யந்திரங்கள் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதேபோல், பர்கானாஸ் மாவட்டத்தில் உள்ள பங்கரில் திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் இந்திய மதச்சார்பற்ற முன்னணி கட்சி தொண்டர்களிடையே மோதல் வெடித்தது.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
சனிக்கிழமை,
ஜூன் 01, 2024

# அரசுக்கு வருவாய் ஈட்டுவதில் வணிக-வரித்துறை சாதனை: தமிழக அரசு அறிக்கை





சென்னை, ஜூன் 01, 2024: தமிழ்நாடு அரசுக்கு அதிக வருவாயை ஈட்டித் தருவதில் முக்கியப் பங்கு வகிக்கும் வணிகவரித்துறையில் முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையிலான செயல்திறன்மிக்க ஆட்சியில், வணிகவரித்துறையின் வாயிலாக பல்வேறு சீரமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

இதுசம்பந்தமாக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

கடந்த மூன்று ஆண்டுகளில் திறம்பட செயல்படுத்தப்பட்டுள்ளதன் பயனாக, வணிகவரித்துறையில் ஏறத்தாழ 47.19 சதவீதம் கூடுதலாக அதிக வருவாய் ஈட்டப்பட்டு சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

இந்த வருவாயின் மூலம் தமிழ்நாட்டின் ஏழை எளிய மக்கள் பயன் பெறுகின்ற வகையில், இந்தியாவில் இதுவரையில் எந்த மாநில அரசுகளும் முன்னெடுக்காத வகையில், முதலமைச்சர் ஸ்டாலினின் தொலைநோக்குப் பார்வையில் உதித்த திட்டங்களான விடியல் பயணத்திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், மக்களைத்தேடி மருத்துவம், நம்மைக்காக்கும் 48 உள்ளிட்ட பல சிறப்பு வாய்ந்த திட்டங்கள் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்டு, ஏழை எளிய மக்களின் ஏகோபித்த நல்ஆதரவுடன் முன்னணி மாநிலமாகவும், முதன்மை மாநிலமாகவும் திகழ்ந்து வருகிறது.

வரிநிர்வாகத்தில் பல்வேறு எளிய நடைமுறைகளும், மின்னாளுமைத் திட்டத்தின் வாயிலாக வலைத்தளங்களின் மூலமாக வரிகளை செலுத்துவதில் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை தொடர்ந்து செயல்படுத்தியதின் பயனாக, முந்தைய ஆட்சியில் (2020 -21) ரூ.85,606.41 கோடி ரூபாய் ஆக இருந்த மொத்த வரிவசூல் வருவாயானது நடப்பாண்டில் (2023 - 2024) 1,26,005.92 கோடி ரூபாய் ஆக உயர்ந்து சாதனை படைத்துள்ளது.

குறிப்பாக, கடந்த மூன்று ஆண்டுகளில் 40,399.51 கோடி ரூபாய் அதிகமாக ஈட்டப்பட்டு 47.19 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அரசுக்கு வருவாய் ஈட்டும் வகையிலும், வணிகம் செய்வதை எளிதாக்கிடும் வகையிலும் வணிக வரித்துறையில் முதன்முறையாக கடந்த ஜூலை மாதம் 2023 முதல் 'எளிய வணிகப்பிரிவு' தொடங்கப்பட்டுள்ளது. மேலும், தனி தணிக்கை பிரிவு, கூடுதல் ஆணையர் (கணினிகள்) மற்றும் கூடுதல் ஆணையர் (வரி ஆய்வு) ஆகிய இரண்டு புதிய பணியிடங்கள், 1000 உதவியாளர் பணியிடங்கள் தரம் உயர்த்தி 840 துணை வணிகவரி அலுவலர் பணியிடங்களாகவும் 160 வணிகவரி அலுவலர் பணியிடங்களாகவும் உருவாக்கப்பட்டுள்ளன.

வணிகர் நல வாரியத்தின் மூலம் பல்வேறு நலத்திட்டங்கள் சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக, 1 லட்சம் ரூபாயாக இருந்த குடும்ப நல உதவி ரூபாய் 3 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், வணிகர் நல வாரியத்தின் வாழ்நாள் உறுப்பினருக்கான பதிவுக் கட்டணம் ரூ. 500 செலுத்துவதிலிருந்து ஓராண்டுக்கு விலக்கு அளிக்கப்பட்டதன் பயனாக, 40,994 உறுப்பினர்கள் இந்த வாரியத்தில் இணைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பொதுமக்கள் தாங்கள் வாங்கும் பொருட்களுக்கு உரிய விலைப்பட்டியை கேட்டுக்பெறும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு வணிகத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் வகையிலும் அரசுக்கு வருவாயை பெருக்கிடும் முனைப்பிலும் "எனது விலைப்பட்டி எனதுஉரிமை" என்கின்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

முதலமைச்சர் ஸ்டாலினின் தொலைநோக்குப் பார்வையுடனும் தமிழ்நாடு எல்லா வகையிலும் ஏற்றம் பெற்றிட முனைப்புடனும், அர்ப்பணிப்புடனும் ஆற்றி வரும் பணி அளவிடற்கரியது. அந்த வகையில், வணிகவரித்துறையில் செயல்படுத்தப்பட்டுள்ள பல்வேறு புதிய திட்டங்களின் மூலம் இனி வரும்காலங்களில் அரசுக்கு கூடுதலாக கிடைக்கும் வருவாயினை உறுதிசெய்யும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தபால் வாக்குகளை வழக்கம்போல் முதலில் எண்ணி அறிவிக்க வேண்டும்; செல்வப்பெருந்தகை வலியுறுத்தல்



சென்னை, ஜூன் 01, 2024: 16 கேமராக்களை வைத்துக்கொண்டு தியானம் என்ற பெயரில், நரேந்திர மோடி அரசியல் நாடகம் நடத்துகிறார் என்று விமர்சித்த காங்கிரஸ் தலைவர் செல்வப் பெருந்தகை, இதுவரை கடைபிடித்து வந்துள்ள தேர்தல் நடைமுறைப்படி, தபால் வாக்குகளை முதலில் எண்ணி அதன் முடிவுகளை அறிவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

சென்னை சத்தியமூர்த்தி பவனில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு. செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசியதாவது:-

கடந்த 10 ஆண்டுகளாக மோடி தலைமையிலான பாரதீய ஜனதா ஆட்சியில் அரசியலமைப்புச் சட்டத்தை கடைபிடிக்காமல் தங்கள் சட்டப்படி பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வந்தனர். தற்போது தபால் வாக்குகளை எண்ணும் முறையிலும் மாற்றம் கொண்டு வந்துள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளது. அதன்படி வாக்குப்பதிவு எந்திரங்களில் வாக்குகளை எண்ணி முடித்த பின் கடைசியாக தபால் வாக்குகளை எண்ண வேண்டும் என்று முடிவெடுத்து இருப்பதாக கூறப்படுகிறது.

கடந்த 2021 ம் ஆண்டு தேர்தல் வரையில் தபால் வாக்குகள் தான் முதலில் எண்ணப்பட்டு அதனுடைய முடிவுகள் அறிவிக்கப்பட்டு வருகிறது. ஆனால் மோடி ஆட்சியில் தேர்தல் ஆணையர்களை தங்கள் வசதிப்படி வளைத்துக் கொண்டு, தபால் வாக்குகளை கடைசியாக எண்ணி அறிவிக்க வேண்டும் என்று முடிவெடுத்துள்ளதாக வெளியாகிற செய்திகள் அதிர்ச்சியாக உள்ளது.

ஏற்கனவே தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் அப்பாவு அவர்களுடைய தேர்தல் முடிவுகளில் தபால் வாக்குகளில் குளறுபடி செய்து வெற்றியை பறித்தனர். அதே முறையில் இந்தியா முழுவதும் செய்வதற்காக தபால் வாக்குகளை கடைசியில் எண்ணி அறிவிக்க வேண்டும் என்று முடிவெடுத்துள்ளதாக கூறப்படுகிறது. இதனை தடுத்து நிறுத்தி, அரசியலமைப்பு சட்ட நடைமுறைப்படி தபால் வாக்குகளை முதலில் எண்ணி அறிக்க வேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி சார்பில் வலியுறுத்தி கூறிக் கொள்கிறோம்.

தியானம் செய்பவர்கள் எல்லோரும் நாட்டு நலன் மக்கள் நலனுக்காக தியானம் மேற்கொள்ளும் பழக்கத்தை கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் வெறுமனே தேர்தல் விளம்பரத்திற்காக, அரசியல் நாடகமாக தியானத்தை யாரும் செய்வதில்லை ஆனால் நரேந்திர மோடி அவருடைய தொகுதியில் தேர்தல் நடைபெறும் நாளில் தேர்தல் ஆதாயம் தேடும் முயற்சியாக தியான நாடகத்தை நடத்தி வருகிறார். இது பிரச்சாரமாக மாறக்கூடியது என்று நாங்கள் முன்பே கூறி, இதனை அனுமதிக்க கூடாது என்று தேர்தல் ஆணையத்திடம் கூறினோம். ஆனால் தேர்தல் ஆணையம் அதனை புறக்கணித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தியானம் என்பது தனிமையில் அமர்ந்து செய்யக்கூடிய ஒன்று. 16 கேமராக்களை வைத்துக்கொண்டு யாரும் தியானம் செய்ய மாட்டார்கள். ஆனால் நரேந்திர மோடி 16 கேமராக்களுக்கு முன் தியானம் செய்வதாக நாடகம் நடத்துகிறார். விவேகானந்தர் அனைத்து மக்களுக்குமான தலைவராக விளங்கினார். ஆனால் அதற்கு நேர் மாறாக நரேந்திர மோடி இதுபோன்று தியான நாடகம் நடத்தி விவேகானந்தருக்கு அவமானம் தேடி தந்துள்ளார் என்று தான் சொல்ல வேண்டும்.

பாலம் கல்யாணசுந்தரம் 42 ஆண்டுகள் நூலகத்தில் பணியாற்றியவர். அவர் கலைஞர் நூற்றாண்டில் நூலகங்கள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்து கடிதம் அனுப்பி உள்ளார். கூகுள் நிறுவனத்திடம் பேசி அதனை டிஜிட்டல் மயமாக்க வேண்டும் என்று நாங்களும் கோரிக்கை வைக்கிறோம். பாலம் கல்யாண சுந்தரம் வேண்டுகோளை நாங்கள் முதலமைச்சர் முன் சமர்ப்பித்து, அதனை காங்கிரஸ் சார்பில் நாங்களும் பரிந்துரை செய்கிறோம்.

நாடாளுமன்றத் தேர்தல் இந்தியா முழுவதும் மடிந்து இந்தியா கூட்டணி ஆட்சி அமைக்கப் போகிறது. 7 கட்டத் தேர்தல்களில் காங்கிரஸ் நிர்வாகிகளும் தோழமைக் கட்சி நிர்வாகிகளும் கடுமையாக உழைத்து களப்பணியாற்றி உள்ளனர். இறுதியாக தேர்தல் வாக்கு எண்ணும் நாளன்றும் 17 சி படிவங்களை வைத்துக்கொண்டு, அதன்படி வாக்கு எந்திரத்தில் உள்ள வாக்கு எந்திரத்தோடு ஒப்பிட்டு பார்த்து வாக்கு எண்ணிக்கையை உன்னிப்பாக கவனித்து செயல்பட வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் மற்றும் தோழமைக் கட்சியின் நிர்வாகிகளை கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை கூறினார்.

இந்த செய்தியாளர் சந்திப்பின்போது, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி துணைத் தலைவர்கள் கோபண்ணா, சொர்ணா சேதுராமன், உ. பலராமன், காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற குழு தலைவர் ராஜேஷ் குமார் உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# வெல வெலக்கும் கூட்டணி இந்தி கூட்டணி! பாஜக கூட்டணி வெற்றி கூட்டணி - டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன்



சென்னை, ஜூன் 01, 2024: பாரதிய ஜனதா கட்சியின் பத்தாண்டு கால பாசக்கார ஆட்சியை வீழ்த்தி இந்தியாவைக் காக்க உருவாக்கப்பட்ட கூட்டணி இந்தி கூட்டணி என்று சொல்லிக்கொண்டிருப்பவர்கள்

இன்று பொறுப்பற்ற கூட்டணியாக மாறி, மக்களின் எதிர்ப்பை பெற்று வெற்றி கிட்டாது என்ற பதற்றத்தின் முகட்டில் நிற்கிறார்கள். பல்லாண்டுகாலமாக தன்னை எதிர்க்க யாருமே இல்லை என்ற மமதையில் இயங்கிக் கொண்டிருந்த காங்கிரசுக்கு எதிராக ஜனநாயகத்தின் சாமானிய மக்களின் கட்சியாக உருவெடுத்த பாஜக இன்று அசுர பலம் பெற்று அசராமல் மக்களுக்கு பணியாற்றும் பிரதமரைக் கொண்டு அதிக பலம் கொண்ட அணியாக தேர்தல் களத்தில் வலம் வருகிறது...

பலம் பெற்றிருக்கிறது....

தங்களது இடைவிடாத அயராத உழைப்பால் மாண்புமிகு பாரதப்பிரதமரும்,பாஜக கூட்டணி கட்சி தலைவர்களும்

இந்தி கூட்டணி உருவாக்கிய போலி பிம்பத்தை உடைத்தெறிந்திருக்கிறார்கள்.....

பாஜக கூட்டணியின் வெற்றி செய்தி எழுதப்பட்டுவிட்டது.... அதிகாரப்பூர்வமாக நமக்கு வெற்றி கொண்டாட்டங்களுக்கு இன்றும் மூன்று நாட்களே உள்ளன....

வாக்கு எண்ணிக்கையின் போது அதிக விழிப்புணர்வுடன் பாஜக கூட்டணி கட்சியினர் இருக்க வேண்டும் ஏனென்றால் மக்களால் ஏற்றம் பெற்ற நாம்....

மக்களை ஏமாற்றியே அரசியல் செய்யும் கூட்டத்தோடு மோதுகிறோம்....

ஜூன் - 4 இந்தியாவின் விடியல் என்று சொல்லிக்கொண்டிருக்கும் தமிழக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அங்கம் வகிக்கும் இந்தி கூட்டணியின் முடிவுக்கு ஆரம்பமாகவும் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களின் 10 ஆண்டுகால நிறைவான, நிலையான ஆட்சிக்கு பதினொன்றாம் ஆண்டு வெற்றி தொடக்கமாக அமையும்....

இந்த இந்தி கூட்டணி வெற்றி பெறாத வெற்று கூட்டணி என்பதை அதன் தலைவர்களை உணர்ந்துவிட்டார்கள்.... பிரதமரை ஒரே நாளில் தேர்ந்தெடுப்போம்...

என்று முடியாத கதையை பேசிக் கொண்டிருப்பவர்கள்.... ஒரே நாள் கூட்டத்தில் கூட கூட முடியாமல் தடுமாறிக்கொண்டிருக்கிறார்கள்....

ஏன் தமிழகத்தில் இருந்தும் முதல்வர் கலந்துகொள்ள பொருள் ஒன்றும் இல்லை என்று பொருளாளரைத்தான் அனுப்பும் நிலை....

இதுவே இந்தி கூட்டணி....

வெல வெலக்கும் கூட்டணி இந்தி கூட்டணி என்றும்....

பாஜக கூட்டணி வெற்றி கூட்டணி என்றும் உணர்த்துகிறது....

விடியல் என்று கூறியவர்கள் இன்று தோல்வியின் விளிம்பில் நின்று கொண்டிருப்பதை ஒப்புக்கொண்டு ஒப்புக்கு நடக்கும் கூட்டம் தான் டெல்லியில்.....

ஒப்பில்லாத பாரதப்பிரதமர் மோடி அவர்களை போன்று ஒப்பானவர் யாருமில்லை என்பதை இந்திய அரசியல் மீண்டும் வலியுறுத்துகிறது....

இந்தி கூட்டணி வலுவிழந்து போய்க்கொண்டிருக்கிறது....

மறுபடியும் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களின் தலைமையில் பாரத தேசம் மேலும் வலுவடையப் போகிறது.... டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# சென்னை போலீஸ்துறையில் 85 பேர் பணி ஓய்வு: கமிஷனர் சந்தீப்ராய் ரத்தோர் கவுரவித்தார்



சென்னை, ஜூன் 01, 2024: சென்னை ஐகோர்ட் பாதுகாப்பு பிரிவு துணை கமிஷனர் ரமேஷ்பாபு, ராயப்பேட்டை உதவி கமிஷனர் துரைபாண்டியன், அமைச்சுப்பணி நிர்வாக அதிகாரிகள் சொக்கலிங்கம், ஜெயகுமார், வேப்பேரி போக்குவரத்து இன்ஸ்பெக்டர் பாண்டிவேலு உள்பட 3 இன்ஸ்பெக்டர்கள், 2 கண்காணிப்பாளர்கள், 41 போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்கள், 30 சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர்கள், 2 தலைமை போலீஸ்காரரர்கள், 2 அலுவலக உதவியாளர்கள், காவல் நிலைய துப்புரவாளர் என சென்னை போலீஸ்துறையில் 85 பேர் நேற்று பணியில் இருந்து ஓய்வுபெற்றனர்.

இவர்களுக்கான பிரிவு உபசார விழா, சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இதில் சென்னை போலீஸ் கமிஷனர் சந்தீப்ராய் ரத்தோர் கலந்துகொண்டு பணி ஓய்வுபெற்ற அதிகாரிகள், போலீசாருக்கு சால்வை மற்றும் மாலை அணிவித்து, சான்றிதழ்கள் வழங்கி கவுரவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மத்திய குற்றப்பிரிவு கூடுதல் கமிஷனர் செந்தில்குமாரி, துணை கமிஷனர் கயல்விழி உள்பட அதிகாரிகளும், ஓய்வுபெற்ற போலீஸ் அதிகாரிகள், போலீசாரின் குடும்பத்தினரும் கலந்துகொண்டனர்.

# கடும் வெப்ப அலை காரணமாக தமிழகத்தில் ஜூன் 10-ந்தேதி பள்ளிகள் திறப்பு

சென்னை, ஜூன் 01, 2024: தமிழகத்தில் கடும் வெப்ப அலை காரணமாக பள்ளிகள் திறப்பு தள்ளிவைக்கப்பட்டுள்ளது. கோடை விடுமுறை முடிந்து, ஜூன் 6-ம் தேதிக்கு பதிலாக பள்ளிகள் ஜூன் 10-ம் தேதி திறக்கப்படும் என்று கல்வி துறை அறிவித்துள்ளது.



தமிழக பள்ளிகளில் 1 முதல் 9-ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு கடந்த ஏப்ரல் 2 முதல் 12-ம் தேதி வரை முழு ஆண்டு தேர்வுகள் நடத்தப்பட்டு, ஏப்ரல் 13-ம் தேதி முதல் கோடை விடுமுறை அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையே, கோடை விடுமுறை முடிந்து ஜூன் 6-ம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என்று பள்ளிக்கல்வி துறை அறிவித்தது. மாணவர்களுக்கான இலவச பாடப் புத்தகங்கள் முதல் நாளிலேயே வழங்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தியது. இதைத் தொடர்ந்து, அரசு, அரசு உதவி மற்றும் தனியார் பள்ளிகளும் பள்ளிகள் திறப்புக்கான அறிவிப்பை வெளியிட்டன.

இந்த சூழலில், தமிழகத்தில் ஆங்காங்கே பெய்து வந்த மழை குறைந்து, வெயில் மீண்டும் அதிகரிக்க தொடங்கியது. பல நகரங்களில் 100 டிகிரி பாரன்ஹீட்டை தாண்டி வெயில் கொளுத்துகிறது.

இதனால், மாணவர்கள் நலன் கருதி பள்ளிகள் திறப்பை தள்ளிவைக்க வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ், தமாகா தலைவர் ஜி.கே.வாசன், மஜக தலைவர் தமிமுன் அன்சாரி, தமிழ்நாடு முஸ்லீம் லீக் நிறுவன தலைவர் விஎம்எஸ் முஸ்தபா உள்ளிட்டோர் வலியுறுத்தினர்.

இந்நிலையில், தமிழகத்தில் பள்ளிகள் திறப்பு ஜூன் 10-க்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளதாக பள்ளிக்கல்வி இயக்குநர் அறிவொளி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில், ‘தமிழகத்தில் நிலவும் கடும் வெப்ப அலை காரணமாக அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அனைத்து வகை தனியார் பள்ளிகளுக்கும் ஜூன் 9-ம் தேதி வரை கோடை விடுமுறை அளிக்கப்படுகிறது. அனைத்து வகை பள்ளிகளும் ஜூன் 10-ம் தேதி திங்கள்கிழமை திறக்கப்படும்’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடும் வெப்ப அலை காரணமாக, புதுச்சேரியில் பள்ளிகள் திறப்பு ஜூன் 6-ம் தேதியில் இருந்து ஜூன் 12-ம் தேதிக்கு தள்ளிவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# நாகையில் பாம்பு கடித்து கோமாவுக்கு சென்ற சிறுவனை காப்பாற்றிய அரசு மருத்துவர்கள்

சென்னை, ஜூன் 01, 2024: நாகையில் பாம்பு கடித்து கோமாவுக்கு சென்ற சிறுவனை காப்பாற்றிய அரசு மருத்தவமனை மருத்துவர்களை பொதுமக்கள் பாராட்டி வருகின்றனர்.



நாகை மாவட்டம் மோகனூரை சேர்ந்த மாரியப்பன் மகன் திவாகர் (வயது 10). கடந்த மே 18 ந்தேதி தனது பெற்றோருடன் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தார்.

அப்போது வீட்டுக்குள் புகுந்த கொடிய விஷம் கொண்ட கட்டுவிரியன் பாம்பு, திவாகரின் கையில் கடித்தது. இதையடுத்து வலியில் அலறித் துடித்த திவாகரை பெற்றோர் மீட்டு சிகிச்சைக்காக நாகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றனர்.

ஆனால் செல்லும் வழியிலேயே விஷம் ஏறியதால் திவாகரின் நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு உடல் உறுப்புகள் செயலிழந்தன. தொடர்ந்து மருத்துவமனையில் இருந்த குழந்தைகள் நல மருத்துவர்கள் சரண்ராஜ், வேத செந்தில் வேலன், முகமது ஷேக் ஆகியோர் அடங்கிய மருத்துவக் குழுவினர் வென்டிலேட்டர் உதவியுடன் திவாகருக்கு தீவிர சிகிச்சை அளித்தனர்.

இருப்பினும் லாக்ட்-இன் சின்ட்ரோம் என்ற ஒரு அரிய நரம்பியல் பாதிப்புக்குள்ளான திவாகர் கோமா நிலைக்கு சென்றான்.

இதைத் தொடர்ந்து தீவிர சிகிச்சைக்குப் பிறகு உடல் நலம் தேறிய திவாகர், பூரண குணமடைந்து வீடு விரும்பியுள்ளார். இதையடுத்து மகனின் உயிரை காப்பாற்றிய நாகை மருத்துவக் கல்லூரி மருத்துவர்களுக்கு திவாகரனின் பெற்றோர் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தனர்.

பாம்பு கடியால் கோமாவுக்கு சென்ற சிறுவனை திறமையாக செயல்பட்டு காப்பாற்றிய மருத்துவக் குழுவினரை பொதுமக்கள் பாராட்டி வருகின்றனர்.

# உத்தி வாய்ந்த பேங்க்அஸ்யூரன்ஸ் கூட்டாண்மை திட்டத்தை அறிவிக்கும் ஃபெடரல் வங்கி மற்றும் டாடா ஏஐஏ லைஃப் இன்சூரன்ஸ்

சென்னை, ஜூன் 01, 2024: இந்தியாவில் தனியார் துறையில் மக்களின் நன்மதிப்பையும், நம்பிக்கையும் பெற்று இயங்கி வரும் ஒரு பிரபல வங்கியான ஃபெடரல் வங்கி, ஆயுள் காப்பீடு துறையில் இந்தியாவில் முன்னணி வகிக்கும் டாடா ஏஐஏ லைஃப் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் உடன் பேங்க்அஸ்யூரன்ஸ் ஒத்துழைப்பு உடன்பாடு ஏற்பட்டிருப்பதை அறிவித்திருக்கிறது. டாடா ஏஐஏ லைஃப் நிறுவனத்தின் விரிவான காப்பீடு திட்டங்களின் தொகுப்பிற்கான அணுகுவசதியை ஃபெடரல் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதே இந்த முக்கியமான ஒத்துழைப்பு நடவடிக்கையின் நோக்கமாகும். நாடெங்கிலும், குறிப்பாக தென்னிந்திய மாநிலங்களில் விரிவான கிளைகள் வலையமைப்பை ஃபெடரல் வங்கி கொண்டிருப்பது, டாடா ஏஐஏ-ன் செயல்பாட்டை வலுவாக விரிவாக்குவதற்கு பெரிதும் துணையாக இருக்கும். இந்த இரு நிறுவனங்களும் நுகர்வோர் நலனை மையமாகக் கொண்ட, தொழில்நுட்பத்தால் ஏதுவாக்கப்படுகிற பிசினஸ் மாடல்கள் மீது சிறப்பு கவனம் செலுத்துவது இந்த கூட்டாண்மை நடவடிக்கையின் கூட்டு ஆற்றலை மேலும் பலப்படுத்தும். ஃபெடரல் வங்கியின் வாடிக்கையாளர்களை பொறுத்தவரை குறித்த கால அளவிற்கான காப்பீடு திட்டம், சேமிப்பு மற்றும் சொத்து உருவாக்க திட்டங்கள்,



பணி ஓய்வு மற்றும் ஓய்வூதிய தீர்வுகள் உட்பட நுகர்வோர் நலனை மையமாகக் கொண்ட டாடா ஏஐஏ-ன் பல்வேறு ஆயுள் காப்பீடு திட்டங்களின் மூலம் பலன் பெறுமாறு அவர்களுக்கு திறனதிகாரத்தை இந்த கூட்டாண்மை நடவடிக்கை வழங்கும். இதற்கும் கூடுதலாக, அதிக ஆயுள் காப்பீடு தொகை, பங்குச்சந்தையுடன் தொடர்புடைய ஆதாயங்கள் மற்றும் ஆரோக்கியம் மற்றும் நலவாழ்வு பலன்கள் என்ற மூன்று ஆதாயங்களையும் சேர்த்து வழங்கும் பரம் ரக்□ஷக் போன்ற டாடா ஏஐஏ-ன் புதுமையான திட்டங்களை பங்கேற்று சிறப்பான ஆதாயத்தை பெறலாம். வகையினத்தில் மிகச்சிறந்த தொழில்நுட்ப தீர்வுகளினால் இயக்கப்படுகிற, தொழில்நுட்பத்தால் ஏதுவாக்கப்பட்ட சேவை அனுபவத்தை வழங்குவதற்காகவே டாடா ஏஐஏ-ன் இத்தீர்வுகள் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. ஃபெடரல் வங்கியின் செயலாக்க இயக்குநர் ஷாலினி வாரியர் இந்த ஒத்துழைப்பு நடவடிக்கை குறித்து கூறியதாவது: “டாடா ஏஐஏ லைஃப் இன்சூரன்ஸ் கம்பெனியுடன் ஒரு உத்தி வாய்ந்த கார்ப்பரேட் ஏஜென்ஸி பேங்க்அஸ்யூரன்ஸ் கூட்டாண்மை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருப்பதை நாங்கள் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம். எமது மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு மிகச்சிறப்பான காப்பீடு திட்டங்களை வழங்குவதே இக்கூட்டாண்மையின் நோக்கம். இந்திய நுகர்வோர்கள் மத்தியில் காப்பீடு செயல்பாட்டில் ஊடுருவல் என்பது மிக குறைவாகவே இருப்பது நன்கு அறியப்பட்ட ஒரு உண்மை. இக்கூட்டாண்மையின் வழியாக எமது வாடிக்கையாளர்களின் நிதிசார் பாதுகாப்பையும், சொத்து மேலாண்மையையும் திறம்பட மேம்படுத்துவது எமது வங்கியின் குறிக்கோளாகும். இந்திய மக்கள் மத்தியில் பெரிதும் மதிக்கப்படும் இந்த இரு பிராண்டுகளும் ஒருங்கிணைந்திருப்பது, வாடிக்கையாளர்களது எதிர்பார்ப்புகளை எப்போதும் மிஞ்சி மேம்பட்ட அனுபவத்தை வழங்குவது மீதான எமது பொறுப்புறுதியை பிரதிபலிக்கிறது.”

டாடா ஏஐஏ லைஃப் இன்சூரன்ஸ்-ன் தலைமை விநியோக அதிகாரி - பேங்க்அஸ்யூரன்ஸ் திரு ரமேஷ் விஸ்வநாதன் பேசுகையில், “எமது வாடிக்கையாளர்களுக்கும், நுகர்வோர்களுக்கும் மிகச்சிறப்பான ஆயுள் காப்பீடு தீர்வுகளுக்கான அணுகுவசதியை வழங்குவதற்காக அவர்களுடன் கூட்டாண்மை உணர்வோடு செயல்படுவது டாடா ஏஐஏ-ன் எமது முனைப்பான செயல்முயற்சியாக இருக்கிறது. சரியான புரிந்துணர்வு மற்றும் கனிவான சேவை அனுபவத்தின் பின்புல ஆதரவோடு எமது வாடிக்கையாளர்கள் கவலையும், சிரமமுமற்ற வாழ்க்கையை வாழ்வதற்கு காப்பீடு தீர்வுகளின் மூலம் அவர்களுக்கு நாங்கள் திறனதிகாரத்தை வழங்கி வருகிறோம். மக்கள் மத்தியில் நன்மதிப்பை பெற்ற மற்றும் தொழில்நுட்பத்தின் மீது தீவிர முனைப்பு காட்டுகிற வங்கியான ஃபெடரல் வங்கியுடன் ஒரு நீண்டகால தொழில் உறவில் ஈடுபடுவதில் நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம். ஃபெடரல் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு எமது பல்வேறு காப்பீடு திட்டங்களை வழங்குவதற்கு இந்த ஒத்துழைப்பு நடவடிக்கை எங்களுக்கு உதவும். இதன் மூலம் இவ்வங்கியின் வாடிக்கையாளர்களது விருப்பங்கள் பூர்த்தி செய்யப்படவும் மற்றும் வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் அவர்கள் நேசிக்கும் நபர்களின் நலனை பாதுகாக்கவும் அவர்களை திறனதிகாரம் பெற்றவர்களாக ஆக்க முடியுமென்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்” என்று கூறினார்.

# கூடுதல் போலீஸ் சூப்பிரண்ட் வெள்ளத்துரை நிபந்தனையுடன் பணி ஓய்வு பெற அனுமதி

சென்னை, ஜூன் 01, 2024: திருவண்ணாமலை மாவட்டத்தில் குற்ற ஆவண காப்பக கூடுதல் போலீஸ் சூப்பிரண்டாக பணியாற்றி வந்தவர் வெள்ளத்துரை. சந்தன மரக்கடத்தல் மன்னன் வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்ட போது, அந்த சிறப்பு அதிரடி படை குழுவில் முக்கிய இடம் பெற்றிருந்தார்.



சென்னையில் பிரபல தாதா அயோத்திக்குப்பம் வீரமணி சுட்டு வீழ்த்தப்பட்டதிலும் அவர் முக்கிய பங்கு வகித்தார்.

வெள்ளத்துரை நேற்று பணியில் இருந்து ஓய்வு பெற இருந்த நிலையில், திடீரென நேற்று முன்தினம் அவரை பணியிடை நீக்கம் செய்து தமிழ்நாடு அரசின் உள்துறை முதன்மை செயலாளர் அமுதா இதற்கான உத்தரவிட்டிருந்தார்.

கடந்த 2013-ம் ஆண்டு சிவகங்கை மாவட்டத்தில் திருப்பாச்சேத்தி போலீஸ் நிலையத்துக்கு விசாரணைக்கு அழைத்து வரப்பட்ட குமார் என்ற கொக்கி குமார் என்பவர் போலீஸ் காவலின் போது மர்மமாக மரணம் அடைந்தார். இதுதொடர்பான வழக்கை சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரித்து வந்தனர். அந்த வழக்கு முடிவடையாத நிலையில் அதில் குற்றம் சாட்டப்பட்ட வெள்ளத் துரை மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கூறப்பட்டது. இதற்கிடையில் வெள்ளத்துரையின் பணியிடை நீக்க உத்தரவை நிறுத்தி வைப்பதாகவும், எனவே அவர் பணி ஓய்வு பெற அனுமதி வழங்கப்படுவதாகவும் உள்துறை முதன்மைச்செயலாளர் நேற்று இரவு உத்தரவு பிறப்பித்தார்.

வெள்ளத்துரை பணி ஓய்வு பெறுவதற்கு அனுமதி அளித்து பிறப்பிக்கப்பட்ட அரசாணையில் சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. அதில், வெள்ளத்துரை பணி ஓய்வு பெறுவதென்பது, சென்னை ஐகோர்ட்டில் அவருக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் அமையும். மேலும், அவரது ஓய்வு கால பணிக்கொடையில் இருந்து (டி.சி.ஆர்.ஜி.) ரூ.5 லட்சம் பிடித்தம் செய்யப்பட வேண்டும் என்றும் இந்தத் தொகை, அவர் மீதான வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் முடிவு செய்யப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

# புலம்பெயர்ந்த இந்தியர்களின் வரலாற்று ஆவணங்களுக்கான முதல் டிஜிட்டல்மயமாக்கல் திட்டம் மஸ்கட்டில் நிறைவடைந்தது



சென்னை, ஜூன் 01, 2024: மஸ்கட்டில் உள்ள இந்தியத் தூதரகம், இந்திய தேசிய ஆவணக் காப்பகத்துடன் (என்ஏஐ) இணைந்து, ஓமனில் உள்ள புலம்பெயர்ந்த இந்தியர்களின் வளமான பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. 'தி ஓமன் சேகரிப்பு - ஓமனில் உள்ள இந்திய சமூகத்தின் காப்பகப் பாரம்பரியம்' என்ற தலைப்பில், இந்த டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் வாய்வழி வரலாற்று முயற்சி மே 19-27, 2024 வரை நடைபெற்றது. முப்பத்திரண்டு முக்கிய இந்திய குடும்பங்கள், முதன்மையாக குஜராத்தில் இருந்து, பங்கேற்று, தங்களின் 250 ஆண்டுகளைக் காட்சிப்படுத்தினர். இந்த திட்டம், புலம்பெயர்ந்தோர் ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்கும் என்ஏஐ-ன் முதல் வெளிநாட்டு முயற்சியாகும், இது வெளிநாடுகளில் உள்ள சமூகத்தின் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் ஒரு வரலாற்றுப் படியைக் குறிக்கிறது. ஓமானில் சுமார் 700,000 இந்தியர்கள் வசிக்கின்றனர், அவர்களில் பலர் இந்தியாவுடன் வலுவான உறவுகளைப் பேணுகையில் ஓமானி சமூகத்தில் ஆழமாக ஒருங்கிணைந்துள்ளனர். இந்த முயற்சி இந்தியாவிற்கும் ஓமானுக்கும் இடையிலான நீண்டகால வரலாற்று மற்றும் கலாச்சார தொடர்புகளை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

ஆங்கிலம், அரபு, குஜராத்தி மற்றும் இந்தி மொழிகளில் 7,000 ஆவணங்கள் பழைய இந்திய வணிகக் குடும்பங்களின் தனிப்பட்ட சேகரிப்பில் இருந்து டிஜிட்டல் மயமாக்கப்பட்டன. 1838 ஆம் ஆண்டிலிருந்து, இந்த ஆவணங்களில் தனிப்பட்ட நாட்குறிப்புகள், கணக்கு புத்தகங்கள், தந்திகள், வர்த்தக விலைப்பட்டியல்கள், பாஸ்போர்ட்கள், கடிதங்கள் மற்றும் புகைப்படங்கள் ஆகியவை அடங்கும். அவர்கள் ஓமானில் உள்ள இந்திய சமூகத்தின் வாழ்க்கை மற்றும் பங்களிப்புகள் பற்றிய கண்கவர் பார்வையை வழங்குகிறார்கள், அவர்களின் கலாச்சார நடைமுறைகள், சமூக நடவடிக்கைகள் மற்றும் வர்த்தகத்தை முன்னிலைப்படுத்துகிறார்கள்.

டிஜிட்டல் மயமாக்கப்பட்ட ஆவணங்கள், என்ஏஐ-ன் டிஜிட்டல் போர்ட்டலான 'அபிலேக் படால்' இல் காப்பகப்படுத்தப்பட்டு, அவற்றை ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அணுகக்கூடியதாக இருக்கும். ரதன்சி புர்ஷோதம், கிம்ஜி ராம்தாஸ் மற்றும் ஹரிதாஸ் நென்சே குடும்பங்கள் ஆகியவை டிஜிட்டல் மயமாக்கப்பட்ட குடும்பங்களில் அடங்கும்.

இந்தத் திட்டம் பழைய சமூக உறுப்பினர்களிடமிருந்து வாய்வழி வரலாறுகளைப் பதிவுசெய்தது, தனிப்பட்ட நிகழ்வுகள், இடம்பெயர்வு அனுபவங்கள் மற்றும் ஓமானில் உள்ள இந்திய சமூகத்தின் பரிணாமம் ஆகியவற்றைப் பதிவுசெய்தது. இந்த முயற்சி காப்பகப் பதிவுகளை முதல்-நிலை விவரிப்புகளுடன் வளப்படுத்துகிறது.

என்ஏஐ-ன் டைரக்டர் ஜெனரல் அருண் சிங்கால், வெளிநாட்டு இந்திய சமூகத்தின் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் இந்தத் திட்டத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். தூதர் அமித் நரங், இது இந்திய புலம்பெயர்ந்தோருடன் தொடர்புகளை வலுப்படுத்தும் பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையுடன் ஒத்துப்போகிறது என்று எடுத்துரைத்தார். ஓமானில் உள்ள இந்திய சமூகத்தின் தலைவரான ஷேக் அனில் கிம்ஜி, இந்த முயற்சிக்கு நன்றி தெரிவித்து, இந்தியாவுக்கும் ஓமானுக்கும் இடையிலான நீடித்த நட்புறவை வெளிப்படுத்துவதில் அதன் பங்கை ஒப்புக்கொண்டார்.

ஓமானின் தேசிய பதிவுகள் மற்றும் ஆவணக் காப்பக ஆணையத்தால் ஆதரிக்கப்படும் இந்தத் திட்டம், வரலாற்றுப் பதிவுகளைப் பாதுகாப்பது மட்டுமின்றி, இந்திய-ஓமன் நட்புறவின் சிறந்த மதிப்பீட்டை ஊக்குவிக்கும் வகையில், புலம்பெயர்ந்த இந்தியர்களுடன் ஆழமான ஈடுபாட்டை வளர்க்கிறது.

# வண்டலூர் சந்திப்பு முதல் காட்டாங்கொளத்தூர் வரை உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணி தொடங்கப்படும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் தகவல்

சென்னை, ஜூன் 01, 2024: தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மூலமாக வண்டலூர் சந்திப்பு முதல் காட்டாங்கொளத்தூர் வரை உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணி விரைவில் தொடங்கப்படும் என்று சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் தெரிவித்துள்ளது.

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:-

கிளாம்பாக்கம் பஸ் நிலையம் கடந்த 30.12.2023 அன்று திறந்து வைக்கப்பட்டு, தற்போது முழு வீச்சில் இயங்கி வருகிறது. கிளாம்பாக்கம் பஸ் நிலையத்தை முழுமையாக மக்கள் மகிழ்ச்சியோடு பயன்படுத்துகின்ற வகையில், தேவையான வசதிகள் ஏற்கெனவே ஏற்படுத்தித் தரப்பட்டுள்ள நிலையில், பஸ் நிலையத்துக்கு உள்ளேயும், வெளியேயும் பயணிகளின் பாதுகாப்பு கருதியும், போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையிலும், இனிமையான பயண அனுபவத்தை வழங்கும் பொருட்டு, பல்வேறு கூடுதல் பணிகளும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிளாம்பாக்கம் பஸ் நிலையத்தில் மாநகர பஸ் நிலையத்தில் இருந்து ஜி.எஸ்.டி சாலையை கடந்து சென்னை மார்க்கமாக செல்லும் மாநகர பஸ்கள் அனைத்தும் தற்போது அயனஞ்சேரி சந்திப்பு வரை சென்று யு வடிவ வளைவில் திரும்பி, சென்னை நோக்கி சென்று வருகின்றன. இதனால் தேவையற்ற கால விரயமும், போக்குவரத்து நெரிசலும் அங்கு ஏற்படுவதை கருத்தில் கொண்டு, இதற்கு நிரந்தர தீர்வாக கிளாம்பாக்கம் பஸ் நிலையத்துக்கு எதிரில் ஜி.எஸ்.டி சாலையில் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மூலமாக வண்டலூர் சந்திப்பு முதல் காட்டாங்கொளத்தூர் வரை முதற்கட்டமாக ஒரு உயர்மட்ட மேம்பாலம் அமைக்க ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு, அதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் தற்போது விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த பணிகள் இந்த ஆண்டு தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், இதற்கு தற்காலிக தீர்வாக சென்னை நோக்கி செல்லும் மாநகர பஸ்களை எளிதில் கையாளும் வகையில் தற்போதைய கிளாம்பாக்கம் பஸ் நிலையத்திற்கு எதிரில் சாலை மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் மாநகர பஸ்கள் மாநகர பஸ் நிலையத்திற்கு எதிரிலேயே ஜி.எஸ்.டி. சாலையை கடந்து எளிதாக சென்னை செல்ல இயலும். மேலும், கடுமையான போக்குவரத்து நெரிசலின் போது செங்கல்பட்டில் இருந்து கிளாம்பாக்கத்தை நோக்கி வரும் பஸ்கள் வண்டலூர் சந்திப்பு வரை சென்று திரும்புவதை தவிர்த்து புதிதாக அமைக்கப்படும் மேற்கண்ட பணிகளின் மூலம் எளிதாக கிளாம்பாக்கம் பஸ் நிலையத்தை சென்றடையவும் வசதிகள் ஏற்படுத்தப்படும். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

# களிப்பூட்டும் மோட்டார்ஸ்போர்ட் ரோட்ஷோ மூலம் இந்தியாவின் தெருக்களுக்கு சக்தியூட்ட மேபில் 1 ஆனது ஆர் பி பி எல் உடன் கூட்டு சேர்கிறது




திருச்சி, ஜூன் 01 2024: மேபில் 1 ஆனது, ரேஸிங் ப்ரமோஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் (ஆர் பி பி எல்) உடன் இணைந்து, எஃப்4 மற்றும் இந்தியா ரேசிங் லீக் (ஐ ஆர் எல்) கார்களின் பெங்களூரு ரோட்ஷோவை வரவிருக்கும் பந்தய சாம்பியன்ஷிப்பிற்கு முன்னதாக வெற்றிகரமாக முடித்தது. பெங்களூருவின் தெருக்களை சிறப்பு நிலைக்கு கொண்டு சென்று, மூச்சை திணரடிக்கும் நிகழ்ச்சிகள் மற்றும் துல்லியமான கார் ஓட்டுதலின் துடிப்பான அரங்காக மாற்றிய இந்த நிகழ்வு, இந்தியாவில் மோட்டார் ஸ்போர்ட் கலாச்சாரத்தை வளர்ப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் ஆர் பி பி எல் உடனான மேபில் 1 இன் தற்போதைய கூட்டாண்மையில் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாக அமைந்தது.

வளர்ந்து வரும் மோட்டார்ஸ்போர்ட் திறமைசாலிகள்- ஐ ஆர் எல் 2023 இன் இரண்டு சாம்பியன்களில் ஒருவரான சோஹில் ஷா, மற்றும் ஃபார்முலா 4 துணை சாம்பியனான ரிஷன் ராஜீவ் இவர்களால் இயக்கப்படும் ஐஆர்எல் மற்றும் ஃபார்முலா 4 கார்களின் இயங்கியல் காட்சியைக் காண்பதன் மூலம், பெங்களூருவின் பார்வையாளர்கள் வரவிருக்கும் பந்தய சாம்பியன்ஷிப் சீசனின் முன்னோட்டத்துடன் விருந்தளிக்கப்பட்டனர். இந்த கார்கள் கே டி பி ஓ கன்வென்ஷன் சென்டரில் பெருமுழக்கம் செய்ததால், நகரின் பரபரப்பான பின்னணியில் சக்திவாய்ந்த என்ஜின்கள் மற்றும் சிலிர்ப்பூட்டும் செயல்களால் கவரப்பட்ட பலதரப்பட்ட பின்னணிகளைச் சேர்ந்த மக்கள் அதிக அளவில் கூடினர். இந்த ரோட்ஷோ உள்ளூர் பார்வையாளர்களை தொழில்முறை மோட்டார்ஸ்போர்டின் ரசனையோடு மகிழ்வித்தது மட்டுமல்லாமல், இந்தியாவில் வாகன மற்றும் தொழில்துறை முன்னேற்றங்களுக்கு அதன் தொடர்ச்சியான பங்களிப்புகளை உயர்த்தி, செயற்கை மோட்டார் எண்ணெய்களில் மேபில் 1 இன் 50 ஆண்டுகால கண்டுபிடிப்பு மற்றும் தலைமையை கொண்டாடியது. பெங்களூரு ரோட்ஷோ 50 ஆண்டுகளாக கோல்டன் மேபில் 1 சின்னத்தின் அறிமுகத்தைக் கண்டுள்ள போது, அதன் பாரம்பரியத்தை கொண்டாடும் வகையில், இந்த பிராண்ட், மேபில் 1 இன் விரிவான பந்தய வரலாற்றிலிருந்து சிறப்பாக வடிவமைக்கப்பட்ட லிவரிகள் மற்றும் பிற சிறப்பம்சங்களை இடம்பெறச் செய்ய திட்டமிட்டுள்ளது. "கடந்த 50 ஆண்டுகளாக மேபில் 1 பிராண்ட் செய்துவரும் பயணம், எல்லைகளைத் தாண்டி, முன்னணி வாகன உற்பத்தியாளர்கள், தொழில்முறை பந்தய வீரர்கள் மற்றும் உலகளவில் மில்லியன் கணக்கான வாகன ஓட்டுநர்களின் நம்பகமான தேர்வாக மாறுவதற்கான எக்ஸான்மேபில் இன் திறனுக்கு ஒரு சான்றாகும். மேபில் 1 - ஆர் பி பி எல் ஷோ ரன் என்பது ஒரு நிகழ்வு மட்டுமல்ல; இது மோட்டார் ஸ்போர்ட்ஸின் ஒரு உற்சாக கொண்டாட்டம். நகரத் தெருக்களுக்குச் செயல்பாட்டைக் கொண்டு வருவதன் மூலம், பந்தய உலகின் மிக நெருக்கமான மற்றும் தனிப்பட்ட அனுபவத்தை ரசிகர்களுக்குக் கொண்டுவருவதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம். இந்த நிகழ்வு, நாடு முழுவதும் வளர்ந்து வரும் மோட்டார்ஸ்போர்ட்ஸுக்கு உற்சாகம் மற்றும் ஆதரவு அளிக்க குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்து, எங்கள் கூட்டாண்மையுடன் இந்தியாவில் மோட்டார்ஸ்போர்ட்ஸை முன்னேற்றுவதில் முக்கிய பங்கு வகிக்கும் ஆர் பி பி எல் உடனான எங்களின் தற்போதைய கூட்டு செயல்பாட்டில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது" என்று எக்ஸான்மேபில் லூப்ரிகண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் உடைய தலைமை நிர்வாக அதிகாரி . விபின் ராணா, கூறினார். "எங்கள் நாடு தழுவிய தொடர் நிகழ்வை பிரமாண்டமான முறையில் துவக்கிய பெங்களூரு ஷோ ரன் வெற்றியால் நாங்கள் மகிழ்ச்சியடைந்துள்ளோம். இந்த நிகழ்வானது, முழு சாம்பியன்ஷிப் பருவத்திற்கான அவர்களின் எதிர்பார்ப்புகளை மேலும் அதிகப்படுத்தி மோட்டார் ஸ்போர்ட்ஸின் சுவாரஸ்யத்தையும் உற்சாகத்தையும் சமூகத்திற்கு நேரடியாகக் காட்சிப்படுத்தியது. இந்த தொலைநோக்குப் பார்வையை உயிர்ப்பிப்பதில் மேபில் 1 முக்கிய பங்காற்றியுள்ளது, மேலும் ஒன்றிணைந்து, இந்தியாவின் மோட்டார்ஸ்போர்ட் களத்தை மேலும் வளப்படுத்த நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். வரவிருக்கும் ரோட்ஷோக்களுக்கு நாங்கள் தயாராகி வரும்போது, நாடு முழுவதும் உள்ள புதிய தலைமுறை மோட்டார்ஸ்போர்ட் ரசிகர்கள் மற்றும் பங்கேற்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்தப் பயணத்தைத் தொடர நாங்கள் உற்சாகமாக இருக்கிறோம்" என்று, ரேசிங் புரமோஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் அகிலேஷ் ரெட்டி கூறினார்.

களிப்பூட்டும் பெங்களூரு ரோட்ஷோவின் மகத்தான வெற்றியைத் தொடர்ந்து, மேபில் 1 மற்றும் ஆர் பி பி எல் ஆகியவை இந்தத் தொடர் நிகழ்வை விரிவுபடுத்தத் தயாராக உள்ளன, வரும் மாதங்களில் அதே வேகம், துல்லியம் மற்றும் மோட்டார் வலிமை ஆகியவற்றின் அதே சிலிர்ப்பான காட்சியை மும்பை, சென்னை மற்றும் இந்தியாவின் பிற பகுதிகளில் உள்ள தெருக்களுக்கு கொண்டு வருகின்றன. இந்தியாவின் மோட்டார்ஸ் போர்ட் கலாச்சாரத்தை வளப்படுத்தவும், அடுத்த தலைமுறை மோட்டார்ஸ்போர்ட் ஆர்வலர்களை மகிழ்விக்கும் மற்றும் ஊக்குவிக்கும் தளங்களை உருவாக்கவும் மேபில் 1 மற்றும் ஆர் பி பி எல் இன் உறுதிப்பாட்டை இந்த முன்முயற்சி எடுத்துக்காட்டுகிறது.

# கோவையில் வீடு கட்டும் போது தண்ணீர் தொட்டி விபத்தில் இறந்த 2 பேர் குடும்பத்துக்கு மு.க.ஸ்டாலின் இரங்கல், நிதிஉதவி



சென்னை, ஜூன் 01, 2024: கோயம்புத்தூர் மாவட்டம், சின்னவேடம்பட்டி கிராமம், மஜரா உடையாம்பாளையம் அருகில் வீடு கட்டும் பணியின் போது தண்ணீர் தொட்டியில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆறுதல் மற்றும் இரங்கலை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:

கோயம்புத்தூர் வடக்கு வட்டம், சின்னவேடம்பட்டி கிராமம், மஜரா உடையாம்பாளையம், மாரியம்மன் கோவில் தெருவில் நேற்று (31.5.2024)மாலைசுமார் 4.30 மணியளவில்தனியருக்குச் சொந்தமான இடத்தில் புதியதாக வீடு கட்டும் பணியில் ஈடுபட்டிருந்த தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பிக்கிலி அஞ்சல், பொதிநத்தம் கிராமத்தைச் சேர்ந்த கோவிந்தன் என்பவரின் மகன் குமார் (வயது 29) மற்றும் ஒரிசா மாநிலம், கஞ்சம், சந்திராபூரைச் சேர்ந்த ஹார்டு பிகாரா என்பவரின் மகன் மனோஜ் (வயது 27) ஆகிய இருவரும் கட்டிடம் கட்டுவதற்காக அமைக்கப்பட்டிருந்த தண்ணீர் தொட்டியில் இறங்கி வேலை செய்து கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட விபத்தில் இந்த இரண்டு நபர்களும் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையுமடைந்தேன்.

இந்நிகழ்வில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த நிகழ்வில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்குத் தேவையான அரசு நிவாரண உதவிகள் வழங்கப்படும்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.